செ.வெ.எண்: 230 நாள்: 19.03.2020

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கு கை சுத்தம் செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கு கை சுத்தம் செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரனா வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை திட்டத்தில் ஊரக பகுதிகளில் வேலை செய்யும் திட்டத் தொழிலாளர்கள் பணித்தளத்திற்கு வருகை தரும் பொழுதும் மற்றும் பணி முடித்து பணித்தளத்தில் இருந்து செல்லும் பொழுதும் சோப்பு பயன்படுத்தி கை சுத்தம் செய்திடவும், கை சுத்திகரிப்பான் கொண்டு கை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம ஊாரட்சிகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

-----------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**